Australian Government
Department of Industry, Science, Energy and Resources

# உங்களுடைய மின்சாரம் மற்றும் எரிவாயுக் கட்டணங்களைச் செலுத்துவதில் நீங்கள் சிரமப்பட்டுக்கொண்டிருந்தால்:

- உங்களுடைய சேவை வழங்குநருடன் பேசுங்கள். அவர்களுடைய தொலைபேசி இலக்கம் உங்களுடைய கட்டணச் சீட்டில் இருக்கும்
- உரிய நேரத்தில் உங்களுடைய கட்டணத்தைச் செலுத்த இயலவில்லை என்றால், 'சிரமக் கால ஆதரவுதவி' (hardship support) வேண்டுமெனக் கேளுங்கள்
- நீடித்த காலத்தில், அல்லது தவறாத சிறு தவணைகளில் பணம் செலுத்துவதற்காகக் 'கட்டணச் செலுத்துத் திட்டம்' (payment plan) ஒன்று வேண்டுமெனக் கேளுங்கள்
- சேவை துண்டிக்கப்படாமல் இருப்பதற்காகவும், வட்டித் தொகைகள் மற்றும் தாமதக் கட்டணங்கள் ஆகியவற்றிலிருந்து உங்களைப் பாதுகாத்துக்கொள்ளவும் அதே சேவைத்திட்டத்தில் தொடர்ந்து நீடித்திருங்கள்
- வீட்டில் அல்லது வேலையில் உங்களுக்கு உதவக்கூடிய அரசாங்க சலுகைகள் அல்லது தள்ளுபடிகள் ஏதும் உள்ளனவா என்று கேளுங்கள்.

மின்சாரம் மற்றும் எரிவாயு போன்ற ஆற்றல்கள் மற்றும் பணத்தைச் சேமிப்பது குறித்த மேலதிகத் தகவல்களுக்கு https://www.energy.gov.au/households/translations எனும் வலைத்தளப் பக்கத்திற்குச் செல்லுங்கள்.